**ஒதுக்கீட்டுத் தலைப்பு 115 – பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சு**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு**

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 சனவரி 21 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று

என்பன இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.12 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) கணக்காய்விற்கான சான்றின்மை**

2012 ஆம் ஆண்டில் அமைச்சரின் அலுவலகத்திலும் பிரதி அமைச்சரின் அலுவலகத்திலும் சேவையில் ஈடுபட்டிருந்த 37 உத்தியோகத்தர்களிற்காக மேலதிக நேர மற்றும் பிரயாணச் செலவினமாக ரூபா 3,038,981 தொகை திறைசேரி ஏற்பாடுகளிலிருந்து செலுத்தப்பட்டிருந்த போதிலும், இந்த உத்தியோகத்தர்களின் வருகையினையும் வெளியேற்றத்தினையும் உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சான்றுகள் எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையால் அக்கொடுக்கல்வாங்கல்களை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**(ஆ) ஒதுக்கீட்டுக் கணக்குகள்**

**(i) மொத்த ஏற்பாடும் செலவும்**

மீளாய்வாண்டிற்காக அமைச்சிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 111,450,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 100,165,799 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க தேறிய சேமிப்புக்கள் ரூபா 11,284,201 ஆக காணப்பட்டதுடன் அது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 10 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| செலவினம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பீட்டு ஏற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நிதியேற்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டு வருபவை | 101,000,000 | 100,600,000 | 6,123,619 | 6 |
| மூலதனம் | 7,450,000 | 10,850,000 | 5,160,582 | 48 |
| மொத்தம் | 108,450,000 | 111,450,000 | 11,284,201 | |

**(ii) பாதீட்டு முரண்**

- 03 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 3,500,000 தொகையான தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.
- 05 செலவின விடயங்களிற்காக மிகை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமையால் ஏற்பாடுகளைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது அச்செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதி ஏற்பாட்டின் 25 சதவீதத்திற்கும் 60 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

11501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை | அதிகுறைந்த எல்லை | உள்ளபடி யானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 3,500,000 | 1,895,800 | 1,200,000 | 2,428,226 | 11,200,000 | 8,382,807 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 11501 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 244,406 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந் நிலுவையினை அறவிடுவதற்கு தவறவிடப்பட்டிருந்தது.

(ii) அமைச்சினால் கடன்களை வழங்குகையில் பின்பற்றவேண்டிய ஏற்பாடுகளைப் பின்பற்றாது ரூபா 138,573 கடன் செலுத்தப்பட்டிருந்தது.

**1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**1.4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

அனைத்து அமைச்சு செயலாளர்கள், மாகாணசபை பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள், உள்ளூராட்சி நிறுவன தலைவர்கள் ஆகியோருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தெம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் அமைச்சினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2013 ஒக்தோபர் 15 ஆந் திகதியே பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்**

அமைச்சின் வாகன அணிக்குரிய முச்சக்கர வண்டியொன்று ஆண்டின் போது ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) வருடாந்தப் பொருள் மெய்மையாய்வை நடாத்தல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆண்டிற்குரிய மெய்மையாய்வு அறிக்கைகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட மேலதிகங்கள் மற்றும் குறைவுகள் தொடர்பிலும் ஏனைய பரிந்துரைகள் தொடர்பிலும் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் படி, பயன்பாட்டிற்கு எடுக்கப்பட முடியாதிருப்பதனால் விற்பனை செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 1,380,633 தொகையான சொத்துக்கள் தொடர்பில் அமைச்சு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாதிருந்ததுடன் நிலையான சொத்துக்கள் பதிவேடும் நாளதுவரையாக பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் படி பற்றாக்குறையாக இனங்காணப்பட்டிருந்த 06 வகைகளிற்குரிய 10 பொருள் விடயங்கள் தொடர்பில் பொறுப்புடைய உத்தியோகத்தர்களை இனங்கண்டு கொள்வதற்கு அமைச்சு தவறியிருந்தது.

**(ஆ) கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் கையாளல்**

குத்தகை உடன்படிக்கையின் கீழ் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கட்டிடத்தில் பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சின் அலுவலகம் நடாத்திவரப்படுவதுடன் அந்த உடன்படிக்கைக்கு முரணாக கராஜ் ஒன்றை நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 264,544 செலவினம் அடங்கலாக நிர்மாண மற்றும் புதுப்பித்தல் நடவடிக்கைகளிற்காக இரண்டு சந்தர்ப்பங்களில் ரூபா 350,361 அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் செலவிடப்பட்டிருந்தது.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

அமைச்சினால் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாதிருந்த ஒரு ஆண்டிற்கும் குறைந்த பொறுப்புக்கள் ரூபா 2,728,697 ஆகும்.

## 1.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) நிதிப்பிரமாணங்கள் 1645/1646 | - | மாதாந்த சம்பவக் குறிப்புகள் மற்றும் 03 வாகனங்களிற்குரிய நாளாந்த ஓட்டக்குறிப்புகள் 2012 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. மேலும் 04 குழாம் வாகனங்களிற்கான சில மாதங்களிற்குரிய மாதாந்த சம்பவக் குறிப்புகளும் வாகனங்களிற்குரிய நாளாந்த ஓட்டக்குறிப்புகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கைகள்

| | | |
|---|---|---|
| (i) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2:11 ஆம் பந்தி | - | அமைச்சிற்குச் சொந்தமான வாகனங்களிற்கு ஒவ்வொரு 06 மாதங்களிற்கு ஒருமுறையும் எரிபொருள் நுகர்வு பரிசோதிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ii) 2008 யூன் 26 ஆந் திகதிய 14/2008 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1(11) ஆம் பந்தி | - <br> - | போக்குவரத்துப் படி மற்றும் பிரயாணப் படியினைப் பெற்றுக்கொள்ளும் 4 உத்தியோகத்தர்கள் அமைச்சிற்கு உரித்தான குழாம் வாகனங்களின் மூலம் முறைப்படியான அங்கீகாரமின்றி 2,405 கி.மீ. பயண வசதிகளை பெற்றுக்கொண்டிருந்தனர். |
| (iii) 2009 யூன் 17 ஆந் திகதிய 09/2009(1) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 6:1 ஆம் பந்தி | - | அமைச்சரின் பதவியணியினரின் வருகைகள் மற்றும் வெளியேற்றங்கள் விரல் அடையாள இயந்திரத்தின் ஊடாக உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. |

(இ) நிதி திட்மிடல் அமைச்சின் சுற்றறிக்கைகள்

| | | |
|---|---|---|
| 2010 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 01/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 6:1 ஆம் பந்தி | 13,130 | அமைச்சரினால் வெளிநாட்டு பயணங்களின் போது குறித்துரைத்த வீதங்களிற்கு மேலாக இணைந்த படிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. |

## 1.7 செயற்திட்டங்களை செயற்படுத்துவதிலுள்ள நலிவுகள்

### செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

அமைச்சினால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுகையில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 43 ஆண்டுகள் பழமைவாய்ந்த சபுகஸ்கந்த எண்ணைச் சுத்திகரிப்பு மிகவும் குறைந்த இயலளவுடன் செயற்பட்டமையால், நவீன தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி உற்பத்திச் செயற்திறனை அதிகரிப்பதற்கான நவீனப்படுத்தி விரிவாக்கச் செயற்திட்டம் 2012 திசெம்பர் 31 வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மசகு எண்ணை இறக்குமதி குளாய்வழி முறைமை 40-70 ஆண்டுகளிற்கு முன்னர் பொருத்தப்பட்டிருந்ததுடன் அவை வினைத்திறனற்ற நிலையில் காணப்பட்டன. அதன் பயனுள்ள ஆயுட்காலமான 25 ஆண்டுகளையும் கடந்திருந்திருந்ததுடன் இந்நாட்டின் பூர்த்தியடைந்த பெற்றோலியக் கேள்வியில் 2/3 பங்கு அந்த பழுதடைந்த குளாய்வழியினூடாக விநியோகிக்கப்படுகின்றன. நாட்டினூடாக செல்லும் குளாய்வழி செயற்திட்டத்தினை விரைவாக செயல்வலுப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், 2012 திசெம்பர் 31 வரை அச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மத்தளையில் அமைந்துள்ள புதிய தெற்கு விமான நிலையத்திற்காக விமான எரிபொருளை களஞ்சியப்படுத்தும் தாங்கித் தொகுதி மற்றும் விமானங்களுக்கு மீண்டும் எரிபொருளை நிரப்பும் வசதிகளைக் கொண்ட நிலக்கீழ் குளாய்வழி முறைமையினை நிர்மாணிப்பதற்கான செயற்திட்டம் 2012 நவம்பர் மாதத்தில் பூர்த்தி செய்வதற்கு நிச்சயிக்கப்பட்டிருந்த போதிலும், 2012 திசெம்பர் 31 வரை அது பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்தில் நிலக்கீழ் குளாய்வழி முறைமையினை நிர்மாணித்தல் செயற்திட்டத்தினை செயற்படுத்துவதற்காக ரூபா 1,000 மில்லியன் செலவில் தொழில்நுட்ப சாத்திய ஆய்வு பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், அதன் நிர்மாண நடவடிக்கைகளின் நிலைமை தொடர்பான போதியளவு தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.8 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஓட்டக் குறிப்புக்களிலிருந்து வெளிப்பட்ட விடயங்களின் படி, உத்தியோகபூர்வ நடவடிக்கைகளிற்காக குழாம் வாகனங்களை பயன்படுத்தும் சதவீதம் 25 இற்கும் குறைவாக காணப்பட்டமை, வாகனத்தையும் எரிபொருளையும் பெற்றுக்கொள்ளும் உத்தியோகத்தர்களிற்காக குழாம் வாகனங்களை பயன்படுத்துவதற்கு இடமளித்திருந்தமை, வாகன ஓட்டப்பதிவேடுகளை சமர்ப்பிக்காதுள்ள சதவீதம் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டமை போன்ற காரணங்களால் அமைச்சிற்குச் சொந்தமான குழாம் வாகனங்களின் பயன்படுத்தல் சர்ச்சைக்குரியதாக காணப்பட்டது. இருந்த போதிலும், உத்தியோகபூர்வ தேவைப்பாடுகளிற்காக குழாம் வாகனங்கள் போதுமானவையா என்பது தொடர்பில் எவ்வித ஆய்ந்தறிதல்களுமின்றி குழாத்திற்காக வழங்கப்பட்டிருந்த இரண்டு வாடகை

வாகனங்களிற்காக ஆண்டின் போது ரூபா 852,512 தொகை திறைசேரி ஏற்பாடுகளிலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

**1.9 நட்டங்களும் சேதங்களும்**

அமைச்சிற்குச் சொந்தமான 02 வாகனங்களிற்கு ஏற்பட்டிருந்த திடீர் விபத்துக்களிற்காக காப்புறுதி இழப்பீடு கிடைக்கப்பெறாமையால் ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 160,778 ஆகும்.

**1.10 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) விமானச் சீட்டுக்கள் செலவினம் குறித்த வெளிநாட்டு நிறுவனத்தினால் செலுத்தப்படும் என்ற நிபந்தனையில் பிரான்ஸின் தனியார் நிறுவனமொன்றின் தனிப்பட்ட செயற்பாடொன்றில் கலந்து கொண்டிருந்த அமைச்சரினதும் அந்தரங்கச் செயலாளரினதும் ரூபா 690,000 தொகையான விமானச் சீட்டுச் செலவினம் அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 6 மாதங்களிற்குப் பின்னர் அதில் ரூபா 178,156 மாத்திரம் மீளளிக்கப்பட்டிருந்தமையால் அக்கொடுக்கல்வாங்கல் காரணமாக அமைச்சிற்கு ரூபா 511,844 நட்டம் ஏற்பட்டிருந்தது. அவ்வாறே, இந்த இருவருக்கும் இணைந்த படியாகவும் அமையப் படியாகவும் ரூபா 548,682 அமைச்சினால் வெளிநாட்டுப் பிரயாண செலவினத்தின் கீழ் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சின் பதவியணியிலுள்ள 96 நபர்களிற்காக 10 தொகுதிகளின் கீழ் வருடந்தோறும் 20,184 செய்திப்பத்திரிகைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் போது அதற்காக ரூபா 540,283 செலவிடப்பட்டிருந்தது.

**1.11 முகாமைத்துவ பலவீனங்கள்**

ஓட்டப்பதிவேடுகளில் எரிபொருள் பாவனை, எரிபொருள் நுகர்வு போன்றவற்றை பரிசோதித்தலுடன் தொடர்புடைய பதிவுகள் செய்யப்பட்டிருக்காமை, எரிபொருள் சமப்படுத்தல் சரியாகச் செய்யப்பட்டிருக்காமை, எழுதப்பட்ட பதிவுகள் மாற்றப்பட்டு மீண்டும் எழுதப்பட்டிருந்தமை மற்றும் எரிபொருள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்காமை போன்ற விடயங்களின் காரணமாக அமைச்சிற்குச் சொந்தமான குழாம் வாகனங்களிற்கான எரிபொருள் பயன்பாடு முறையான கட்டுப்பாடொன்றின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 1.12 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 12 | 11 | 01 |
| முன்றாம் நிலை | 02 | 01 | 01 |
| இரண்டாம் நிலை | 44 | 29 | 15 |
| ஆரம்ப நிலை | 27 | 20 | 07 |
| ஏனையோர் (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 03 | 03 | - |
| மொத்தம் | 88 | 64 | 24 |

வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கு போதிய நடவடிக்கை எடுக்கப்படாமையால் மீளாய்வாண்டின் இறுதியளவில் 24 வெற்றிடங்கள் காணப்பட்டன.

### (ஆ) விளைவற்ற மனித வளம்

செயற்திட்டம் 01 இன் கீழ் அமைச்சரின் பதவியணியின் ஊடகப் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கும் மேலாக மூன்று ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு அதற்காக செயற்திட்டம் 02 இலுள்ள அமைச்சின் நிர்வாக மற்றும் நிறுவகச் சேவைகள் செலவின விடயத்தின் கீழ் ரூபா 761,572 செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, இந்த 03 பதவிகளும் செயற்திட்டம் 02 இன் கீழ் அமைச்சின் பதவியணிக்கு உள்வாங்கப்பட்டு அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டின் போது செயற்திட்டம் 01 அல்லது செயற்திட்டம் 02 இன் கீழ் அமைச்சரின் அலுவலகம் அல்லது அமைச்சின் நிர்வாகத்தின் ஊடாக எவ்வித கடமைப் பொறுப்புக்களும் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

### (இ) முறையற்ற விதத்தில் ஏனைய தரப்பினர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனித வளம்

கல்வி அமைச்சிற்குரிய காவலர் பதவியிலுள்ள ஊழியர் ஒருவர் 2010 மே 04 ஆந் திகதி முதல் வெற்றிடமொன்று இல்லாது பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சின் கணக்குகள் பிரிவிற்கு இணைக்கப்பட்டிருந்ததுடன் அவருக்கு அமைச்சினால் எவ்வித கடமைப் பொறுப்புக்களும் ஒப்படைக்கப் பட்டிருக்கவில்லை. இருப்பினும், இவ் ஊழியர் செயற்திட்டம் 01 இல் அமைச்சரின் அலுவலகத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் போது செயற்திட்டம் 02 இன் கீழ் சம்பளமாக ரூபா 263,345 தொகை கல்வி அமைச்சிற்கு மீள்நிரப்பப்பட்டு, செயற்திட்டம் 01 இன் கீழ் மேலதிகநேர மற்றும் பிரயாணச் செலவினமாக ரூபா 138,183 செலுத்தப்பட்டிருந்தது.